# ஒன்றிய அரசால் - புதுச்சேரிக்கு ரூ. 1,423 கோடி இழப்பு!

## கண்டன ஆர்ப்பாட்டத்தில் – எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பகீர் குற்றச்சாட்டு!



புதுச்சேரி, டிச. 27 -

மகாத்மா காந்தி பெயரில் இருந்த தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை விக்சித் பாரத் - ரோஜ்கர் & அஜீவிகா மிஷன் எனும் பெயராக மாற்றிய ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும், கிராமப்புற தொழிலாளர்களின் வேலை உரிமையை பறிக்கும் இச்சட்டத்தை திரும்ப பெற்றிட வலியுறுத்தியும், இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் நேற்று காலை 10.00 மணி அளவில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகம் முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமை தாங்கினார்.

காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி முதன்மைச் செயலாளர் தேவபொழிலன், மதிமுக கபிரியேல், திராவிடர் கழக மாநில செயலாளர் வீரமணி, மனிதநேய மக்கள் கட்சி சகாபுதீன், சிபிஐ நிர்வாகக் குழு அந்தோணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மகாத்மா காந்தி பெயரில் இருந்த 100 நாள் வேலை திட்டத்தை ராமர் பெயரில் மாற்றிய ஒன்றிய பாஜக அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதில், திமுக சட்டமன்ற உறுப்பினர் வி. அனிபால் கென்னடி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், சண்முகம், சக்திவேல், அமுதா குமார், நர்கீஸ், பசுபிக் சங்கர், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், நடராஜன், தியாகராஜன், இளஞ்செழியப்பாண்டியன், சீத்தாராமன், கலிய கார்த்திகேயன், காங்கிரஸ் நிர்வாகிகள் ராஜ்குமார், ஹசன், முருகையன், சத்தியமூர்த்தி, சிபிஎம் பெருமாள், சீனுவாசன், மதிமுக மாசிலாமணி, விசிக அர்ச்சுனன், பழநி, ரமேஷ், பரமசிவம், சிபிஐ மோதிலால், சீனுவாசன், கோவிந்தராஜ், சரவணன், திமுக அணி நிர்வாகிகள் சீனு. மோகன்தாசு, வீரய்யன், ரமணன், குலசேகரன், காயத்ரி, சுமதி, முகம்மது ஹாலித், ஆறுமுகம், அங்காளன், கதிரவன், கோபி, காளி, தேசிகன், மிலிட்டரி முருகன், சபரிநாதன், செல்வநாதன், சுப்ரமணி, பாலகுரு, அன்புநிதி, அருள்மணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வில்லியனூர் தொகுதி திமுக செயலாளர் மணி கண்டன் நன்றி கூறினார்..

ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது:

-தேசிய ஊரக வேலை உறுயளிப்புத் திட்டம் 2005-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்டு, அத்திட்டம் 2009 காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2 அன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டத்தை கிராமப்புற மக்கள் 100 நாள் வேலை என்று அழைக்கின்றனர். இத்திட்டம் கிராமப்புற ஏழை மக்களுக்கு சிறந்த முறையில் செயல்பட்டு வந்தது. ஒன்றியத்தில் பாஜக ஆட்சி அமைந்ததில் இருந்து இத்திட்டத்திற்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வந்தனர்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுச்சேரியில் இத்திட்டம் ஆண்டுக்கு வெறும் 23 நாட்கள் மட்டுமே வேலை நடந்துள்ளது. இந்த இரட்டை என்ஜின் ஆட்சியில் 2020-21-ஆம் ஆண்டில் சராசரி 22 நாட்கள் 2021-22-ஆம் ஆண்டில் 16 நாட்கள், 2022-23-ல் 20 நாட்கள், 2023-24-ல் 23 நாட்கள், 2024-25-ல் 22 நாட்கள், 2025-26- ல் 20 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற மோசமான ஆட்சியை எங்கும் பார்க்க முடியாது. இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ 300 கோடி வழங்க வேண்டும். ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 176 கோடி மட்டுமே ஒன்றிய அரசு வழங்கி உள்ளது. இத்திட்டத்தில் புதுச்சேரி மாநிலத்திற்கு ரூ.1,423 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் பங்களிப்பை புதுச்சேரிக்கு தராமல் பாஜக அரசு வஞ்சித்துள்ளது. இந்திய மக்களின் மனதில் இருந்து மகாத்மா காந்தி பெயரை நீக்க முடியாது. ஒவ்வொரு குடும்பத்திலும் குலதெய்வமாக காந்தி உள்ளார். பக்கத்தில் இருக்கும் அண்டை மாநிலத்தில் 75 நாட்கள் வேலை கொடுக்கப்படுகிறது. ஊழல் அதிகாரிகள் அதிகரித்துள்ளதும் இத்திட்டம் முடங்குவதற்கு காரணமாக உள்ளது. 100 நாள் திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்திருந்தால் அதன் மூலம் ஏழைகளுக்கு பணம் கூலியாக சென்றிருந்தால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு இருக்கும்.

100 நாட்களே முழுமையாக கொடுக்க முடியாத ஒன்றிய அரசு தற்போது 125 நாட்கள் வேலை கொடுப்போம் என்று கூறியிருக்கிறது. இது எப்படி சாத்தியம் மாநில அரசு 40 சதவீத நிதி பங்களிப்பு என்றால் திவால் ஆன புதுச்சேரி அரசால் இத்திட்டத்தை எப்படி செயல்படுத்த முடியும். மற்ற மாநிலங்கள் போல் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த புதுச்சேரி அரசால் முடியாது. இங்குள்ள அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லை. இதனால் ஸ்மார்ட் சிட்டி திட்டம், சுற்றுலா வளர்ச்சித் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் தோல்வி கண்டுள்ளது. எந்த திட்ட த்தையும் முழுமையாக செயல்படுத்த முடியாததுப்பில்லாத அரசாங்கம். இப்படி புதுச்சேரி மக்களை தொடர்ந்து ஏமாற்றி புதுச்சேரியை சுடுகாடாக மாற்றி வரும் என். ஆர்.காங்கிரஸ், பாஜக கூட்டணி அரசை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராகி விட்டனர். புதுச்சேரி அரசின் முகத்திரை கிழித்தெறியப்பட வேண்டும். அம்பானி, அதாணிக்கு கடன் தள்ளுபடி செய்கிற ஒன்றிய அரசு ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் 100 நாள் திட்டத்திற்கான பணத்தை கொடுக்காமல் அவர்கள் வயிற்றில் அடித்துள்ளது. மகாத்மா காந்திக்கு செய்த பாவமும், ஏழை, எளிய மக்கள் வயிற்றில் அடிக்கும் பாவமும் உங்களை சும்மா விடாது. கொள்ளை அடிக்க பல வழிகள் உண்டு. ஏழை மக்கள் வயிற்றில் அடிக்காதீர்கள். இவ்வாறு பேசினார்.



மதுரை கிழக்கு தொகுதி கிழக்கு (தெற்கு) ஒன்றியத்திற்குட்பட்ட கருப்பாயூரணி மற்றும் ஆண்டார் கொட்டாரம் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்ததுடன் முடிவுற்ற மக்கள் நலத்திட்ட பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, ஒன்றிய செயலாளர் ஹக்கீம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் வினோத், ஒன்றிய அவைத்தலைவர் முருகன், பொருளாளர் தாஜுதீன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

### நெல்லை மேற்கு மாவட்டத்தில் - விடுபட்ட வாக்காளர்களை

# புதிதாகச் சேர்த்திடும் பணியில் கழகத்தினர் ஈடுபடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை.டிச.27.

நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் திருநெல்வேலி மேற்கு மாவட்டம், அம்பாசமுத்திரம் ஆலங்குளம் சட்டப்பேரவை தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களுக்கு புதியதாக சேர்க்கவும் மற்றும் 18 வயது நிறைந்தவர்களுக்கும்,முகவரி மாற்றம் மற்றும் வாக்கு சாவடி மாற்றம் படிவம் உள்ளிட்ட படிவங்களை நிரப்பி வழங்கிட உதவி மையங்கள் அந்தந்த வாக்குச் சாவடிகளில், இன்று (27.12.2025 – சனிக்கிழமை) நாளை (28.12.2025 – ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்கள் அம்பாசமுத்திரம்,ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற உள்ளது.

எனவே ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அவரவர் பகுதியில் உள்ள (BLA 2,)(BDA ) ஆகியோர்களை இன்றும் – நாளையும் ஆகிய இரண்டு நாட்களும் முழுமையாக பயன்படுத்தி இந்த பணியினை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: இரண்டு நாட்களும் கழக நிர்வாகிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள ஒவ்வொரு வாக்கும் நமக்கு முக்கியம் என்பதை மிக கவனத்துடன் உணர்ந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் -

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் - நல உதவிகள் வழங்கல்!

நெல்லை, டிச. 27 -

நெல்லை மத்திய மாவட்டம் இளைஞரணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (27.12.2025) நெல்லை மத்திய மாவட்டத்தில் உட்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் தொழிலா ளர்களுக்கு 49 சீருடை மற்றும் 1049 மாநகராட்சி களப்பணியாளர்களுக்கு நலத்திட்டம், 4049 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்வு இன்று முன்னாள் நெல்லை மத்திய மாவட்டம் கழக அலுவலகத்தில் (தெற்கு பைபாஸ் ரோடு) நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சர்,முன்னாள்,இந்நாள் நாடாளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,மேயர்,துணை மேயர் மாவட்ட,மாநகர,பகுதி,ஒன்றிய,பேரூர், வட்டம்,கிளைக் கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சிப் பிரதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்டம் இளைஞரணி துணை அமைப்பாளர் வி.முகம்மதுமீரான்மைதீன் செய்துள்ளார்.




திருவண்ணாமலை மாவட்டம்

ரூ. 2,095 கோடியில்

314 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தல்

46 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 27.12.2025 சனிக்கிழமை

நேரம் : காலை 11.30 மணி

இடம் : கலைஞர் திடல், மலப்பாம்பாடி, திருவண்ணாமலை மாவட்டம்



திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகள்

- ரூ. 14,734 கோடியில் 95,62,076 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்
- ரூ. 10,213 கோடியில் 2,02,697 வளர்ச்சித் திட்டப் பணிகள்
- மொத்தம் ரூ.24,947 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள்

எல்லார்க்கும் எல்லாம் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ. / 1534 / வரைகலை / 2025

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009